*Tamilmanam International Research Journal of Tamil Studies*
*Volume 7, Issue 05 (May-2026)*
www.tamilmanam.in
*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm07052026*

தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Peer-Reviewed | Open Access | Crossref DOI & Global Indexing | Google Scholar Impact Factor | Multidisciplinary
Article DOI: https://doi.org/10.63300/tm07042026.33

# Epigraphic Evidences Regarding the Tax and Units of Measurement of the Ancient Tamil Lineage

**Dr.P.Deepa***,
Assistant Professor and Head, Dept of History, Sri Ram Nallamani Yadava Arts and Science College , Tenkasi – 627804.
*Correspondence: deeluxmathi@gmail.com.

**Article Info**
Received on 20-April-2026, Revised on 22-April-2026, Accepted on 25-April-2026, Published on 01-May-2026

## ABSTRACT

Literature and epigraphs serve as two powerful witnesses that aid us in understanding the greatness of the Tamil people. Recognizing the significance of these epigraphs, a wealth of information—including the names of the various taxes mentioned therein, the specific purposes for which they were collected from the peoples, the methods of their collection, the measurements used to determine their ratio, the reasons for tax exemptions, and the authorities empowered to impose them—has been compiled here. These taxes, which constituted the primary source of state revenue, are most abundantly documented in the epigraphs dating back to the Chola and Pandya periods.

Inscriptions reveal that our ancestors classified and administered a greater variety of taxes than those we pay today. Agriculture, industry, commerce, endowment functioned exceptionally well within every sphere of society. In all activities, including agriculture, they identified the specific category of the activity and collected taxes as a share, in accordance with its nature. Furthermore, tax rates were determined only after extensive studies encompassing various factors, such as the nature of the land, the quality of the yield, and the type of crops cultivated. Consequently, the methods for assessing the quantum of taxes to be collected were established across several categories, including counting, weighing, linear measurement, and volumetric measurement.

The available evidence has been presented sequentially, without being categorized by specific time periods, geographical regions, or rulers. Since current units of measurement, such as grams, litres, and cents have been presented in comparison with earlier measurement systems and an understanding of these taxes can be obtained at the end of this study.

***KEYWORDS:*** *Coins, Tax, Aayam, Peru, Pattam, Scale, Jar.*

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).

Publisher's Note: The views, opinions, and information presented in all publications are the sole responsibility of the respective authors and contributors, and do not necessarily reflect the views of Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors. Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors hereby disclaim any liability for any harm or damage to individuals or property arising from the implementation of ideas, methods, instructions, or products mentioned in the content.

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 7, Issue 05 (May-2026)*
www.tamilmanam.in *DOI: https://doi.org/10.63300/tm07052026*

# தமிழ் முதுகுடியின் திறை முறையும் அளவீட்டு அலகுகளும் பற்றிய கல்வெட்டு சான்றுகள்

[1]**முனைவர்: பொ.தீபா.**, உதவிப் பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர்,
ஸ்ரீ ராம் நல்லமணி யாதவா கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
தென்காசி – 627804.

**அறிமுகம்:**

"வாரிப் பெருக்கி வளம்படுத்து உற்றவை
ஆராய்வான் செய்க வினை"
'இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த வகுத்தலும்"

ஒரு ஆட்சியாளர் படைபலம் கொண்டு நாட்டை பாதுகாத்து ஆட்சி செய்தால் மட்டும் போதாது. மிகச் சிறந்த ஆட்சியாளராக திகழ வேண்டும் எனில் நாட்டின் வருவாய் வரும் வழிகளை கண்டறிந்து அவற்றை வசூல் செய்து பாதுகாத்து மக்களுக்கும் நாட்டுக்கும் பயனுள்ள வழிகளில் செலவு செய்திட வேண்டும். தமிழ் சான்றோர்களும் அத்தகைய வழிகளிலேயே தங்களின் வாழ்கையை அமைத்துள்ளனர். தமிழ் இனத்தின் பழமை என்பது உலகமே கண்டு வியக்கும் வண்ணம் தங்களின் அரசியல் கலை பண்பாடுகளை கல்வெட்டுகளில் தொகுத்து வைத்துள்ளனர்.

நிதி வளத்தினால் தன்னிறைவு பெற்ற அரசினால் மட்டுமே நல்லாட்சி செய்ய இயலும் என்பதை உறுதி செய்யும் வகையில் பல்வேறு வரிகளை நிர்ணயம் செய்து அவற்றை வசூல் செய்வதற்கான அமைப்புகளை அல்லது தனி அதிகாரிகளை ஏற்படுத்தி, பெறப்படும் வருவாயை நாட்டின் கருவூலத்தில் சேர்த்து அதன் மூலம் கோயில்களையும் பொதுப் பணிகளையும் மேற்கொண்டனர்.

**வரி என்பதன் பொருள்:**

ஒரு குடியானவன் தான் பிறந்த நாட்டிற்கு செய்ய வேண்டிய கடமையாகவும் தான் செய்யும் தொழில், வணிகம் அல்லது பணியின் மூலமாக ஈட்டும் லாபத்தில் ஒரு குறிப்பிட்ட பங்கை அரசிற்கு செலுத்துவதே வரி ஆகும்.

**வரி என்பதன் வேறு சொற்கள்:**

தமிழ் சொல் ஆட்சியில் வரி என்பதை குறிக்கும் வேறு சில பெயர்களும் கையாளப்படுகின்றன. அதன் படி கப்பம், திறை, அந்தராயம், கந்தாயம், தீர்வை, ஒழுங்கு நிரை, வரிதல், கோடு என பல பெயர்களினாலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

**வரியின் நோக்கம்:**

சிறு துளி பெருவெள்ளம் என்ற வாக்கிற்கு இணங்க மக்கள் தாங்கள் செலுத்தும் சிறு அளவான வரியும் ஒன்று சேர்ந்து மிகப்பெரிய தொகையாக மாறும். இந்த பணத்தின் பெரும் பங்கானது நாட்டின் பாதுகாப்பிற்காக செலவிடப்படும். அதன் பின்னர் கோயில் கட்டுதல், அவற்றை பராமரித்தல், இறைபணி செய்யும் வேத விற்பன்னர்களை ஆதரித்தல், ஊழியர்கள் மற்றும் அதிகாரிகளை நியமித்தல், கல்விச் சாலைகள் அமைத்தல், இயல் இசை நாடக கலைஞர்களை ஆதரித்தல், குளங்கள் வெட்டுதல் மற்றும் பராமரித்தல், சத்திரங்கள் நிர்வகித்தல் என பல பொது காரியங்களுக்காகவும் இந்த வரிப் பணத்தில் இருந்து தான் செலவிடப்பட்டது.

, | Copyright © Author(s)

**வரியின் வகைகள்:**

கல்வெட்டில் பல வரிகள் காணக்கிடைக்கின்ற போதிலும் அவைகளை சில வகைகளில் குறிப்பிடலாம். அதன்படி குடிமக்களிடம் இருந்து பெறப்பட்ட பொது வரி, அடுத்து வணிகர்களிடம் பெறப்பட்ட வணிக வரி. தொழில் செய்வோர்களிடம் பெறப்பட்ட தொழில் வரி, சமுதாய வரி, மன்னர்களிடம் இருந்து இதை தவிர பல்வேறு நோக்கங்களைக் கொண்ட ஏராளமான வரிகள் இருந்துள்ளன.

**வரி நிர்வாகம்:**

வரிகளை நிர்வாகம் செய்வதிலும் தமிழ் சான்றோர்கள் உலகிற்கு முன்னோடிகளாக செயல்பட்டுள்ளனர். எந்த பொருள்களுக்கு வரிகளை விதிக்க வேண்டும், அவற்றை எந்த அளவு விதிக்க வேண்டும், பொருள்களுக்கு ஏற்றவாறு வரிகளை எந்த வகையில் வசூல் செய்ய வேண்டும், அவற்றை யார் மூலம் வசூல் செய்ய வேண்டும், எந்த பொருள்களுக்கு வரி நீக்கம் செய்ய வேண்டும், அவற்றை எவ்வாறு முறைப்படுத்தி சாட்சிகளோடு ஆவணப்படுத்த வேண்டும் என அறிவார்ந்த வகையில் வரி நிர்வாகம் செய்துள்ளனர்.

**வரி அமைப்பு:**

கல்வெட்டுச் செய்திகளின் படி வரிகளை இயற்றி அவற்றை நடைமுறை செய்வதற்கு என்று தனி நபர் அல்லது அமைப்புகள் செயல்பட்டன என்பதை அறியமுடிகின்றது. இதன் படி வரிகளை பெறுவதற்கு மன்னரின் கண்காணிப்பின் கீழ் அதிகாரிகளும் (புரவரி திணைக்களம் நாயகம்) அல்லது ஊர்ச் சபை போன்ற வரிகளை பெற்று மன்னரிடம் கொடுக்கும் தனி அமைப்புகளும் செயல்பட்டன. மேலும் வரி நீக்கம் செய்யவும் (இறையிலி), சர்வமானியம் கொடுக்கவும் மன்னருக்கோ அல்லது ஊர்ச் சபைக்கோ மட்டுமே அதிகாரம் இருந்துள்ளது. வரி நிர்வாகத்தில் இவர்களின் பங்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது.

**வரி செலுத்தும் விதம்**:

மன்னரோ அல்லது சபையாரோ இயற்றிய வரிகளை எவ்வாறு செலுத்த வேண்டும் என்ற வரைமுறையும் வகுக்கப்பட்டு இருந்தது. ஒரு நிலத்திற்கான வரி என்பது காசாகவோ, பொன்னாகவோ அல்லது அந்த நிலத்தில் விளையும் பயிரின் மதிப்பில் குறிப்பிட்ட பங்கை பொருளாகவோ வழங்க வேண்டும். செலுத்தும் வரி என்பது அந்த நிலம் எத்தகைய தன்மை உடையது என்பதை பொறுத்து வரியின் தன்மையும் அளவும் மாறுபடும். நில வரியோ அல்லது மக்கள் செலுத்தும் குடிமை வரியோ பெரும்பாலும் காசாகவே செலுத்தப்பட்டுள்ளது. மக்கள் தாங்கள் செலுத்தும் வரிக்கு பதிலாக குறிப்பிட்ட காசு அல்லது பொன்னை முதலீடாகக் கொடுத்து அதில் வரும் வட்டியை வரியாகக் கட்டிய செய்திகளும் கல்வெட்டில் இடம்பெற்றுள்ளன.

**வரி நீக்கம்:**

வரிகளை இயற்றுவதற்கும் பெறுவதற்கும் எவ்வாறு அமைப்புகள் செயல்பட்டதோ, அவ்வாறே அந்த அமைப்புகள் வரிகளை நீக்கும் அதிகாரத்தையும் பெற்று இருந்தன. ஊர் சபையினர் அல்லது அதிகாரிகளின் வேண்டுகோளுக்கு இணங்க மன்னர்கள் அத்தகைய வரி நீக்கத்தை வழங்கியுள்ளனர். அதைப் போலவே ஊர் ஆட்சி செய்யும் சபையினர்கள் கோயில்களுக்கு தானமாக வழங்கப்பட்ட நிலங்களுக்கும் வரிகளை நீக்கிக் கொடுத்துள்ளனர்.

இவ்வாறு வரி நீக்கிக் கொடுக்கும் ஆணைகளை கல்வெட்டுகளிலும் செப்பு பட்டயங்களிலும்

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm07052026*

எழுதிக் கொடுத்துள்ளனர்.

**கல்வெட்டுகளில் வரி:**

நீண்ட நெடிய வரலாற்றைக் கொண்ட தமிழ் சமூகம் பல்வேறு ஆட்சியாளர்களின் காலங்களிலும் தன்னுடைய கலை இலக்கியம் வானவியல் மருத்துவம் ஜோதிடம் என பன்முக சமூக வளர்ச்சியை வெளிப்படுத்தி உள்ளது. அதில் கல்வெட்டுகளில் காணப்படும் வரிகள் தொடர்பான நிதி நிர்வாகமும் ஒன்று. இதில் பல்வேறு காலங்களில் விதிக்கப்பட்ட வரிகளும் அதன் பெயர்களும் அளவுகளும் கல்வெட்டுகளில் இடம் பெற்றுள்ளன. மக்கள் செலுத்தும் வரிகள், வணிகர்கள் செலுத்தும் வரிகள், கோயில்களுக்காக தானமாக வழங்கப்பட்ட நிலங்களுக்கான வரிகள், மக்கள் மேற்கொள்ளும் நோன்புகளுக்கான வரிகள், ஏற்றுமதி மற்றும் இறக்குமதி செய்யப்படும் பொருள்களுக்கான சுங்க வரிகள் என பல்வேறு வரிககளைப் பற்றிய செய்திகளும் வரிகளை செலுத்தாத நிலையில் எடுக்கப்படும் நடவடிக்கைகள் பற்றியும், வரிகளை சேகரிக்கும் அதிகாரிகளின் பெயர்கள், ஊரின் பெயர், சபைகளின் பெயர்கள், வரி செலுத்துபவர்களின் பெயர்கள், சாட்சிகளின் பெயர்கள், கல்வெட்டினை எழுதியவரின் பெயர்கள் அனைத்து விவரங்களும் கல்வெட்டுகளில் இடம் பெற்றுள்ளன.

**வரிகளின் வகைகள்:**

**கடமை வரி:**

நிலத்தில் விளையும் விளைச்சலில் இருந்து அரசுக்கு செலுத்த வேண்டிய வரி ஆகும்.

**உல்கு (சுங்க வரி):**

வாணிப நோக்கோடு ஏற்றுமதி மற்றும் இறக்குமதி செய்யப்படும் பொருள்களுக்கு விதிக்கப்படும் வரியே சுங்க வரி அல்லது உல்கு வரி எனப்படும்.

**வத்த வரி:**

ஏரியை பராமரிக்க அந்த ஏரியினால் பயன் பெறும் ஊர்மக்கள் செலுத்தம் வரி வத்த வரியாகும். இதைப்போன்றே குளத்தை பயன்படுத்துவதற்கும் கட்டிய வரி குளவடை எனப்பட்டது.

**ஆளுக்கு நீர் பாட்டம்:**

ஏரியை பராமரிக்கவும் நீரை முறையாக வயல்களுக்கு திறந்து விடவும் நியமனம் செய்யப்பட்ட நபருக்கு கொடுக்க வேண்டிய ஊதியத்துக்காக பெறப்பட்ட வரியே ஆளுக்கு நீர் பாட்டம் என்று அழைக்கப்பட்டது.

**காணிக்கை வரி:**

ஆலயங்களின் திருவிழா, வளர்ச்சி, புனரமைப்பு, மற்றும் தங்களின் பக்திக்காகவும் மக்கள் கோயில்களுக்கு செலுத்தும் வரிகள் காணிக்கை வரி, காணிக்கை தட்டாயம் என்று பெறப்பட்டது. இது பணம், பொருள் அல்லது நிலமாகவும் பெறப்பட்டது.

**வாசற்பேறு:**

மக்கள் தங்கள் வீட்டிற்காக அவற்றின் அளவுகள் அடிப்படையில் கட்டிய வரியாகும். பெரிய வீடு, சிறிய வீடு என வீடுகளின் அளவுகளைப் பொறுத்து இந்த வரி நிர்ணயம் செய்யப்படும்.

**இலாஞ்சினைப்பேறு:**

நில விற்பனை, தானம் உள்ளிட்ட அனைத்து பரிவர்த்தனைகளும் அரசு அதிகாரிகளின் ஒப்புதலோடு தான் நடைபெற்றது. அவ்வாறு நடைபெறும் பரிவர்தனைகளுக்கு அரசு

முத்திரைகளை பயன்படுத்த மக்கள் செலுத்திய வரியே இலாஞ்சினைப்பேறு ஆகும்.

**கொற்றிலக்கை:**

மன்னர்கள் தாங்கள் வைத்திருக்கும் படை வீரர்களின் பராமரிப்புக்காக பெறப்பட்ட வரியாகும். இந்த வரிகளைக் கொண்டு படைகளின் பராமரிப்பு மற்றும் ஊதியங்கள் வழங்கப்பட்டன.

**கற்பூரக்காணிக்கை:**

கற்பூர வழிபாடு என்பது கோயில்களில் நடக்கும் முக்கியமான நிகழ்வாகும். இதன் முக்கியத்துவம் அறிந்தே கைக்கோளர்கள் போன்ற வணிக குழுக்கள் மற்றும் பொது மக்களிடம் இருந்து அதற்காக கற்பூரக் காணிக்கை என்ற பெயரில் வரி பெறப்பட்டது.

**வட்ட கம்பட்டம்:**

கைக்கோளர்கள் என்னும் நெசவாளர்கள் செலுத்தும் மற்றுமொரு வரியாகும்.

**காரிய ஆராய்ச்சி:**

ஊரை நிர்வாகம் செய்யும் அரசு அதிகாரிகளுக்காகச் செலுத்தும் வரி காரிய ஆராய்ச்சி ஆகும்.

**ஆனைச் சாலை:**

ஆனைகளை வளர்க்கும் இடம் ஆனைச் சாலை என்று அழைக்கப்பட்டது. அவ்வாறு ஆனைச் சாலைகளில் வளர்க்கப்பட்ட ஆனைகளுக்கு பெறப்பட்ட வரி ஆகும்.

**குதிரைப் பந்தி:**

அக்காலத்தில் அதிக முக்கியத்துவம் மற்றும் மதிப்பு வாய்ந்ததாக குதிரை இருந்தது. அத்தகைய மதிப்பு மிகுந்த குதிரைகளின் மீது பெறப்பட்ட வரி தான் குதிரைப் பந்தி, குதிரை வரி, குதிரை விலாடம் என அழைக்கப்பட்டது.

**ஆள்வரி:**

வரியை பணம் மற்றும் பொருளாக அல்லாமல் உடல் உழைப்பாகவும் அக்காலத்தில் செலுத்த முடிந்தது. இதன் படி ஒருவர் தான் செலுத்த வேண்டிய வரிக்காக அரசாங்கத்தில் பணி புரிவார்.

**வெட்டி வரி:**

மனித உழைப்பு தேவைப்படும் நேரங்களில், அது படைக்காகவோ அல்லது கோயில் குளம் போன்ற பொது இடங்களின் புனரமைப்பு பணிக்காகவோ மக்கள் கட்டாயமாக தங்களின் உழைப்பை வரியாக செலுத்துவது வெட்டி வரி ஆகும். இதுவே ஆள்தேவை, வெட்டிப் பாட்டம், கால்த் தேவை, வெட்டி முட்டையான் என்று பல பெயர்களிலும் கல்வெட்டுகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**கரைத் தேவை:**

சோழர் காலங்களில் பருவ மழையின் போது காவிரி கரையில் ஏற்படும் உடைப்புகளை சரி செய்ய ஆட்கள் தேவைப்பட்டனர். கரைகளை சரி செய்ய வரி போன்று கட்டாய பணி செய்ய ஆட்கள் அமர்த்தப்பட்ட இந்த முறைக்கு கரைத் தேவை என்று பெயர்.

**மனை வரி:**

மக்கள் தங்களின் வீடுகளுக்காக செலுத்தும் சொத்து வரி தான் மனை வரி யாகும். இந்த மனை வரி என்பது வீடுகளின் அளவுகளைப் பொறுத்து மாறுபடும். மேலும் மனை தறி மற்றும்

மனை இறை என்ற பெயர்களிலும் அழைக்கப்பட்டது.

**நாட்டு விநியோகம்:**

வணிகர்கள் தங்களின் உற்பத்திப் பொருட்களை நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கு கொண்டு சென்று விற்பனை செய்யும் பொருட்டு செலுத்தும் வரியாகும்.

ஆயம்: ஊரினை நிர்வாகம் செய்யும் அமைப்பிற்காக செலுத்தும் நிர்வாக வரியே ஆயம் எனப்படும்.

**கார்த்திகைப் பச்சை:**

தற்போதும் கிராமங்களில் கோயில் திருவிழாக்களின் போது வீடுகளுகளில் வரி பெற்று விழா கொண்டாடுகின்றனர். இதைப் போலவே அக்காலத்தில் மக்கள் தங்களின் இறை வழிபாட்டுக்காக குறிப்பாக கார்த்திகை மாத வழிபாட்டிற்காக செலுத்துவது கார்த்திகைப் பச்சை வரியாகும். இதுவே கார்த்திகை காணிக்கை என்றும் பெறப்பட்டது.

**பிள்ளையார் நோன்பு தேவை:**

பிள்ளையார் வழிபாடுகளுக்காக ஊர் மக்களிடம் இருந்து வரிகள் பெறப்பட்டு அதன் மூலம் விழாக்களோ அல்லது பூசைகளோ மேற்கொள்ளப்பட்டன. இதற்கு பிள்ளையார் நோன்பு தேவை வரி என்று பெயர்.

**வண்ணக் கூலி:**

நெய்த துணிகளுக்கு வண்ணம் பூசும் தொழிலை செய்த தொழிலாளர்கள் அல்லது வணிகர்கள் செலுத்திய வரி வண்ணக் கூலி என்பதாகும்.

**தரவுக் கூலி:**

சந்தைகளில் விற்பனைக்காக கொண்டு வரும் பொருட்களை அனுமதிப்பதற்காக அரசிற்கு செலுத்திய வரி தரவுக் கூலி ஆகும்.

**நல்லா நல்எருது:**

மக்கள் தாங்கள் வளர்க்கும் கால்நடைகளில் ஒன்றாகிய எருதுகளுக்காகவும் வரி செலுத்தினர். அதுவே நல் எருது என்ற பெயரில் பெறப்பட்டது. இதற்க்கு எருமைப் பொன் என்றும் பெயர்.

**ஏரி மீன் பாட்டம்:**

ஏரி மற்றும் குளங்களில் உள்ள மீன்களை பிடித்து வணிகம் செய்பவர்கள் அரசிற்கு செலுத்தும் வரி மீன் பாட்டம் ஆகும். இதற்கு பாசை வரி, பாசிப் பட்டம் ஏரியின் பாட்டம் என்றும் பெயர்.

**தறிக்கடமை:**

நெசவுத் தொழில் செய்யும் நெசவாளர்களிடம் இருந்து பெறப்பட்ட வரியாகும். தறி ஒன்றுக்கு என்ற அடிப்படையில் வரி விதிக்கப்பட்டது. இதில் பல்வேறு வகையான தறி வகைகளும் அவற்றுக்கான வரிகளும் இருந்தன. இதைத் தவிர தறிக்காசு, தறிஇறை, தறிக்கடமை, தறிஆயம், ஆட்டைச் சம்மாதம், நூலாயம், தறிக்காணம், பட்டடை அச்சுத் தறி என பல்வேறு பெயர்களிலும் தறி வரிகள் பெறப்பட்டன.

**சூலவரி:**

நெசவுத் தொழில் செய்யும் கைக்கோளர்கள் தங்கள் துணிகளை கடை வீதிகளில் கொண்டு சென்று விற்பனை செய்வதற்காக சூலவரியை செலுத்தினர்.

**குடிமை:**

விவசாய நிலத்தை குத்தகைக்குப் பெற்றவர்கள் அந்த நிலத்திற்க்காக செலுத்தும் வரியே குடிமை வரியாகும்.

**இடைப்பாட்டம்:**

சோழர்காலத்தில் ஆநிரை வளர்பவர்களிடம் இருந்து பெறப்பட்ட வரியாகும். இடையர் வரி, இடைப்பூச்சி வரி, ஆயவர்க்கம், இடையர் பேற்கடமை, இடைவரி, ஆநிரை வரி என்று பல பெயர்களிலும் அழைக்கப்பட்டது.

**பசுக்கடமை:**

மக்களின் முக்கிய மற்றும் மதிப்பு மிகுந்த தொழிலான பசுக்களை வளர்ப்பவர்கள் அதற்காக செலுத்திய வரி பசுக்கடமை ஆகும்.

**ஆள்வரி:**

ஊர்களில் குடியிருக்கும் மக்கள் தங்கள் ஊரை நிர்வாகம் செய்யும் சபை அல்லது நிர்வாகத்திற்கு செலுத்துவது ஆள்வரி ஆகும்.

**செக்கிறை:**

செக்கைக் கொண்டு எண்ணெய் உற்பத்தி செய்யும் எண்ணெய் வாணியர்களிடம் இருந்து பெறப்பட்டது செக்கிறை அல்லது செக்கு மன்றாடி ஆகும்.

**வேலிக்காசு:**

நிலம் வைத்திருந்தவர்கள் அந்த நிலங்களுக்கான வரியை ஒரு வேலி நிலத்துக்கு இவ்வளவு காசு என்ற அடிப்படையில் செலுத்தினர். இதுவே வேலிக்காசு வரியாகும்.

**காணிக் காசு:**

வேலிக்காசு வரியைப் போன்றே காணி நிலம் வைத்திருப்பவர்களும் அந்த காணி நிலத்திற்கான வரியை காசாக செலுத்தியதால் அதற்கு காணிக் காசு என்று பெயர். இந்த காணி நிலத்திற்கான வரியை பொருளாக கட்டினால் அது காணிப்பேறு, காணி இறை என்று பெயர்.

**மாவடை:**

வேலிக்காசு மற்றும் காணிக் காசு போன்றே மா என்ற நில அளவின் அடிப்படையில் நிலங்களை வைத்து இருந்தவர்கள் செலுத்திய வரி மாவடை என்பதாகும்.

**எச்சோறு:**

ஊரை நிர்வாகம் செய்யும் அரசு அதிகாரிகளின் உணவிற்காக மக்களிடம் இருந்து பெறப்பட்ட வரி ஆகும்.

**அந்தராயம்:**

மக்கள் தாங்கள் வசிக்கும் ஊரின் சபைக்கோ அல்லது நாட்டார்கள் எனப்படும் நிர்வாக அமைப்புக்கோ செலுத்தும் வரியாகும். இது உள்ளூர் வரியாகும்.

**தட்டார்ப் பாட்டம்:**

பொன் அணிகலன்களைச் செய்யும் பொற்க் கொல்லர்களிடம் இருந்து அரசு பெற்ற வரி தட்டார்ப் பாட்டம், தட்டடுவு, தட்டொலி, தட்டுக்காயம் என்று அழைக்கப்பட்டது.

**கடைக்கூட்டு இலக்கை:**

பொருட்களை விற்பனை செய்வோர் அல்லது வணிகம் செய்யும் வணிகர்கள் என பொது இடமாகிய கடை வீதிகளில் (கடைகள் இல்லாமல்) வியாபாரம் செய்பவர்கள் அரசிற்கு செலுத்திய

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 7, Issue 05 (May-2026)*
**www.tamilmanam.in** *DOI: https://doi.org/10.63300/tm07052026*

வரி கடைக்கூட்டு இலக்கை எனப்பட்டது.

**நாட்டு விநியோகம்:**

நாட்டில் உள்ள நீர் நிலைகள், கட்டிடங்கள் போன்றவற்றை பராமரித்தல் அரசு நிர்வாக செலவுகள் போன்ற பொது காரியங்களுக்காக மக்களிடம் இருந்து பெறப்பட்ட வரி தான் நாட்டு விநியோகம் என்று குறிப்பிடப்பட்டது.

**கட்டில் ஏறுதல்:**

சோழர்கள் ஆட்சியின் போது திருமணங்களுக்காக மக்கள் கட்டிய வரியாகும். இதற்காக திருமணத்தின் போது இரு வீட்டாரும் அரசிற்கு வரி செலுத்தினர். இந்த வரி கண்ணாலக் காணம் என்றும் பெறப்பட்டது.

**காசுவற்கம்:**

கைத்தொழில் செய்யும் கைக்கோளர் உள்ளிட்ட வணிகர்கள் தாங்கள் அரசிற்கு செலுத்த வேண்டிய தொழில் வரியை காசாக செலுத்துவது காசுவற்கம் எனப்பட்டது.

**கோட்டைப்பணம்:**

படைகளின் பராமரிப்புக்காக மக்கள் அரசிற்கு செலுத்திய வரி கோட்டைப்பணம் என்று அழைக்கப்பட்டது.

**தச்சுத் தேவை:**

தச்சு தொழில் எனப்படும் மர வேலை செய்யும் தச்சர்களிடம் இருந்து பெறப்பட்ட வரியாகும்.

**நெல் அந்தராயம்:**

உழவு செய்யும் குடிகள் தங்களின் நிலத்தில் விளைந்த நெல்லுக்காக செலுத்த வேண்டிய வரியை குறிப்பிட்ட விகிதத்தில் நெல் மணிகளாகவே செலுத்தினர். இதற்க்கு நெல் அந்தராயம் என்று பெயர்.

**காசு அந்தராயம்:**

வணிகர்கள் தாங்கள் செலுத்த வேண்டிய வரியை அரசின் ஆணைப்படி காசாக செலுத்தினர். இதுவே காசு அந்தராயம் ஆகும்.

**உவச்சன் பேற்கடமை:**

கோயில்களில் தோல் இசை கருவிகளை இசைப்பவர் உவச்சர் என்று அழைக்கப்பட்டனர். கோயில் ஊழியர்களாகவே இருந்துள்ள இவர்களுக்கு நிலங்களும், ஊதியங்களும் வழங்கப்பட்டுள்ளன. இவர்கள் கட்டிய வரியே உவச்சன் பேற்கடமை ஆகும்.

**சர்வமானியம்:**

கோயில் கட்டும் பொருட்டோ, பராமரிப்பு செய்யவோ அல்லது அதன் அன்றாட வழிபாட்டுக்காகவோ குறிப்பிட்ட ஊர்களின் வரிகள் அனைத்தையும் வழங்குவதே சர்வமானியம் எனப்படும். இதன் மூலம் அந்த வரிகள் கோயில்களின் வருமானங்களாக மாறி விடும்.

**குடி நீங்கா தேவதானம்:**

கோவில்களுக்கோ, அந்தனர்களுக்கோ மற்றும் மடங்களுக்கோ நிலங்களையோ அல்லது ஊர்களையோ தானமாக கொடுக்கும் பொழுது அந்த இடத்தில் இருக்கும் மக்களை வெளியேற்றாமல் நிலங்களை தானமாக கொடுப்பது குடி நீங்கா தேவதானம். இதன்படி இந்த நிலத்தில் இருந்து வரும் வரிகள் கோயிலுக்கு உரியதாகும்.

,| Copyright © Author(s)

**நெற்கடமை:**

நிலங்களில் பயிர் செய்யும் மக்கள் தாங்கள் செலுத்த வேண்டிய வரியை பொருளாகவோ அல்லது பயிராகவோ செலுத்தலாம். ஆனால் சில சமயங்களில் வரிகளை பொருளாக அதாவது நெல்லாக மட்டுமே கட்ட வேண்டும் என்ற விதியும் இருந்தது. இதற்கு நெற்கடமை என்று பெயர்.

**நன்செய் மாவடை:**

ஆறு மற்றும் ஏரி குளங்களின் மூலம் போதிய நீர்பாசனம் பெற்று பயிர் செய்யப்படும் நன்செய் நிலங்களில் விளையும் நெல், வாழை போன்ற பயிர்களுக்காக பெறப்பட்ட வரியாகும்.

**புன் பயிர் கடமை:**

ஆறு மற்றும் குளங்களின் நீர் பாசனமின்றி மழையை எதிர்பார்த்து பயிர் செய்யும் நிலங்கள் புன் பயிர் நிலமாகும். இந்த நிலங்களில் இருந்து பெறப்படும் வரி புன் பயிர் கடமை ஆகும்.

**அங்காடிக் கூலி:**

அங்காடி எனப்படும் கடை வைத்து வியாபாரம் செய்பவர்கள் அந்த கடைக்காக அரசிற்கு செலுத்திய வரி அங்காடிக் கூலி அல்லது அங்காடி பாட்டம் எனப்படும்.

**இலை வாணிகர் பேற்கடமை:**

வணிகர்கள் பலதரப்பட்ட பொருள்களை வாணிபம் செய்து வந்தனர். அவர்கள் செய்யும் பொருளை பொறுத்து அவர்களை செக்கு வாணிகர், கயிறு(வடம்) வாணிகர், எண்ணெய் வாணிகர் என்று அழைத்தனர். அதன் படி வெற்றிலை வணிகம் செய்பவர்கள் இலை வணிகர் என்றும் அவர்கள் செலுத்திய வரி இலை வாணிகர் பேற்கடமை அல்லது இலை வாணியப் பாட்டம் என்றும் அழைக்கப்பட்டது. வெற்றிலை பயிர் செய்வதற்கு விதிக்கப்பட்ட வரி இலைக்கூலம் எனப்பட்டது.

**வழிநடைக்கு இடும்பனம்:**

மக்கள் ஒரு இடத்தில் இருந்து வேறு இடத்திற்கு வழிபாட்டிற்காகவோ அல்லது வியாபார நோக்கமாகவோ பயணம் செய்யும் போது தாங்கள் கடந்து செல்லும் ஊர் அல்லது நாட்டு அமைப்புக்கு கட்டிய வரி ஆகும்.

**அரண்மனை வரி:**

மக்கள் தங்களின் ஊர் நிர்வாகத்திற்கு வீடு, நிலம், தொழில் ஆகியவற்றிற்கு வரி செலுத்தியது போலவே மன்னனின் அரண்மனைக்கும் வரி செலுத்தினர். இதற்க்கு அரண்மனை வரி அல்லது இராசகர வரி என்று பெயர்.

**செட்டிப் பச்சை:**

வணிகம் செய்யும் வணிகர்கள் அல்லது செட்டியார்கள் அரசிற்கு செலுத்தும் வரியாகும். இதுவும் ஒரு வகையில் இன வரி போன்றதாகும்.

**இறை கட்டின நெல்:**

நிலங்களில் விளைந்த பொருளுக்கு செலுத்த வேண்டிய வரிகளை பணமாக கட்டாமல் நெல்லாக கட்டுவது இறை கட்டின நெல் என்று அழைக்கப்பட்டது. எந்த பொருள் விளைந்தாலும் அதற்கு கட்ட வேண்டிய வரியை நெல்லாகவும் கட்டலாம் என்ற நடைமுறையும் இருந்துள்ளது. இது தவிர விளைந்த நெல்லுக்கான வரியை நெல்லாகவே கட்டும் நெல் ஆயம் என்ற வரி முறையும் இருந்துள்ளது.

**காசு ஆயம்:**

மக்கள் நிலங்களுக்காகவோ, விளை பொருளுக்காகவோ, வணிகத்துக்காகவோ அல்லது பிற நோக்கங்களுக்காகவோ தாங்கள் கட்ட வேண்டிய வரிகளை காசாகவும் கட்டினர். அவ்வாறு கட்டியதற்கு காசு ஆயம் என்று பெயர்.

**அதிகார வர்த்தனை:**

அரசின் நிர்வாக செலவுகளுக்காக அரசு அலுவலரால் வசூல் செய்யப்படும் வரிகள் ஆகும்.

**நிருபச் சம்பளம்:**

அரச கட்டளையை நாட்டின் மற்ற பகுதிகளுக்கு கொண்டு சென்று கொடுக்கும் அலுவலருக்கு என்று பெறப்படும் வரி ஆகும்.

**முத்தாவணம்:**

வணிகர்களும் வியாபாரிகளும் தாங்கள் விற்பனை செய்யும் பொருளுக்காக கட்டும் வரியாகும்.

**இன ஆயம்:**

சமூகத்தில் உள்ள மக்கள் தாங்கள் சேர்ந்த இனத்தின் சார்பாகவும் வரி செலுத்தினர். வலங்கை இடங்கை என பலதரப் பட்ட இனங்களை சார்ந்தவர்களும் இத்தகைய வரிகளை செலுத்தி உள்ளனர்.

**ஒப்படி:**

சோழர்கள் காலத்தில் மக்கள் தங்களின் நில வரியை தானியங்களாக அரசருக்கும், உள்ளூர் தலைவர்களுக்கும் கட்டினர். இதுவே ஒப்படி வரி ஆகும்.

**குமரகச் சரணம்:**

சோழர்கள் காலத்தில் முருகன் கோயில்களில் இருந்து பெறப்பட்ட வரியாகும்.

**ஊர்க்கழஞ்சு:**

ஊரில் இருக்கும் பொதுவான நீர் ஓடைக்காக ஊர்மக்களிடம் பெறப்படும் வரியாகும். சோழர்கள் ஆட்சியில் இத்தகைய வரிகள் பெறப்பட்டன.

**வண்ணாரப்பாறை**:

சலவை செய்யும் தொழிலாளர்கள் தாங்கள் சலவை செய்ய பயன்படுத்தும் பாறைகளுக்காக (கல்) செலுத்தும் வரியே வண்ணாரப் பாறை வரியாகும்.

**குசக்காணம் (குயவர் வரி):**

மண்பாண்டத் தொழில் செய்யும் குயவர்கள் தங்கள் உற்பத்தி செய்யும் பானைகளுக்காக அரசிற்கு செலுத்தும் வரி குசக்கானம், சக்கர காணிக்கை, திரிகை ஆயம் ஆகும்.

**தனிக்கூறை (துணிநெய்வோர் வரி):**

நெசவுத் தொழில் செய்யும் நெசவாளர்கள் தங்கள் தொழிலுக்காக செலுத்தும் வரி தனிக்கூறை ஆகும்.

**பஞ்சுப் பீலி:**

அறுவடை செய்யப்பட்ட பருத்தியில் இருந்து விதை நீக்கப் பட்ட பருத்தி பஞ்சுக்கு பெறப்பட்ட வரியாகும்.

**கதிர்க்காணம்:**

உழவர்கள் தாங்கள் பயிர் செய்யும் தானிய கதிர்களுக்காக செலுத்திய வரியாகும். இந்த்

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 7, Issue 05 (May-2026)*
www.tamilmanam.in *DOI: https://doi.org/10.63300/tm07052026*

வரியானது தானியங்களுக்கு ஏற்ப போல் மாறுபடும்.

**ஆட்டுநிறை வரி:**

ஆடுகளை வளர்ப்பவர்கள் அந்த ஆடுகளின் மதிப்பை பொருத்து அரசாங்கத்திற்கு செலுத்துவதே ஆட்டுநிறை வரியாகும். இதைப்போலவே மாடுகளை வளரப்பவர்கள் செலுத்துவது நல்லாநல்லெருது வரியாகும்.

**ஊடுபோக்கு:**

நிலங்களில் பயிர் செய்யும் உழவர்கள் பயிர்களுக்கு இடையில் ஊடு பயிராக விளைவிக்கும் பிற பயிருக்காக அரசிற்கு செலுத்தும் வரியே ஊடு போக்கு வரியாகும்.

**ஓடக்கூலி (அ) வத்தை வரி**:

ஆற்றை கடந்து செல்ல பயன்படுத்தப்படும் ஓடங்களை வைத்து தொழில் செய்பவர்கள் செலுத்தும் வரியாகும். இது தோணிக் கடமை என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

**மன்றுபாடு:**

வழக்கிற்காக நீதி மன்றங்களை நாடுவோர்கள் செலுத்தும் வரி மன்றுபாடு வரியாகும்.

**தீயெறி:**

கோயில்களில் பயன்படுத்தப்படும் தீப்பந்தங்களுக்குகாக செலுத்தப்படும் வரி ஆகும்.

**ஈழப்பூட்சி:**

தென்னை மரத்தில் இருந்து இறக்கப்படும் கள்ளுக்காக செலுத்தும் வரி ஈழப்பூட்சியாகும். அதுவே பனை மரத்தில் இருந்து இறக்கப்படும் கள்ளுக்கு பெறுவது சாட்டுவரி மற்றும் பணம்பாகு என்று பெயர்.

**கடையடைக்காய்**:

அடைக்காய் எனப்படும் பாக்கினை விற்பனை செய்பவர்கள் கட்டிய வரியாகும்.

**பாடி காவல்:**

ஊரின் காவல் பணியை செய்யும் காவல் பணி வீரர்களுக்காக பெறப்பட்ட வரியாகும்.

**வரிப் பொத்தகம்:**

மக்களிடம் இருந்து பெரும் வரிகளை பற்றிய கணக்குகளை ஓலைகளில் எழுதி வைக்கும் ஊழியர் வரிப் பொத்தகம் என்றும் வரிப் பொத்தக நாயகம் என்றும் அழைக்கப்பட்டார்.

**புரவரி திணைக்களத்தார்:**

வரிகளை நிர்வாகம் செய்யும் அமைப்பைச் சார்ந்த அதிகாரிக்கு புரவரி திணைக்களத்தார் என்று பெயர்.

**ஏணிக்காணம்:**

தென்னை பனை உள்ளிட்ட மரங்களை வளர்பவர்கள் அந்த மரங்களுக்காக செலுத்திய வரியாகும்.

**குற்றத்தண்டம்:**

குற்றம் அல்லது தவறு செய்தவர்களிடம் இருந்து பெறப்படும் வரியாகும். இந்த தண்டப் பணம் என்னும் வரியானது ஊர்ச் சபை அல்லது நாட்டர்களால் நிர்ணயம் செய்யப்படும். இது அதிகரணத் தண்டம் என்றும் அழைக்கப்பட்டது.

**கொடிக்கடமை:**

கொடி வேலி என்னும் மருத்துவ குணம் நிறைந்த செடியை பயிர் செய்பவர்கள் செலுத்திய

வரியாகும். இதையே செங்கொடிக் காணம் என்றும் அழைத்தனர்.

**தண்டற் கடமை:**

வரி வசூல் செய்யும் அரசு அதிகாரியின் (தண்டல் நாயகன்) சீவிதத்திற்காக பெறப்பட்ட வரியாகும். இவ்வாறு வரி வசூல் செய்யும் அதிகரியின் ஊதியத்திற்காக பெறப்படும் வரி தண்டாளர் முதல், தண்டவிலக்கை, தண்டல்மேனி, தண்டலிற் கடமை, தண்ட நாயகர் மகமை, தடிப்பதக்கு என பல பெயர்களில் அழைக்கப்பட்டது.

**அக்கசாலை வரி:**

மன்னர்களின் முத்திரையோடு பொன் மற்றும் செம்புகளால் ஆன நாணயங்கள் அச்சடிக்கும் இடங்களுக்கு அக்கச்சாலை என்று பெயரிட்டு அழைத்தனர். இதற்காக மக்களிடம் வசூல் செய்யப்பட்ட வரியே அக்கச்சாலை வரியாகும்.

**அடிக்காசு:**

வணிகர்கள் தாங்கள் வணிகம் செய்யும் இடங்களின் அடி அளவைப் பொறுத்து அதற்கான வரியை அரசிற்கு செலுத்தினர். இதற்கு அடிக்காசு என்று பெயர்.

**உப்பாயம்:**

உப்பு உற்பத்தி செய்பவர்களிடம் இருந்து அரசு பெற்ற வரி உப்பாயம் அல்லது உப்புக்காசு ஆகும்.

**ஊர்க்கணக்கர் சீவிதம்**:

ஊரினை நிர்வாகம் செய்து ஊர் வரவு செலவு கணக்குகளை பராமரிக்கும் ஊர் கணக்கன் என்னும் அதிகாரியின் ஊதியத்துக்காக ஊர் மக்கள் செலுத்திய வரியாகும். இதற்கு ஊர்க்கழஞ்சு என்றும் பெயர்.

**ஏர்க்காணிக்கை:**

உழவு செய்யும் குடிகள் தாங்கள் பயன்படுத்தும் உழவுக் கருவியான ஏர் கலப்பைக்காக செலுத்தும் வரி ஏர்க்காணிக்கை அல்லது ஏர்பொன் எனப்படும்.

**நெய்விலை:**

நெய் வியாபாரம் செய்பவர்கள் அதற்கான வரியாக அரசுக்கு செலுத்துவது நெய் விலையாகும்.

**இறையழிச்சு:**

தனி நபர்களோ அல்லது அமைப்பை சார்ந்தவர்களோ தாங்கள் தானமாகக் கோயில்களுக்கு வழங்கும் நிலங்களுக்கான வரிகளை இரண்டு வழிகளில் வரி நீக்கம் பெற்றுள்ளனர். இதன்படி குறிப்பிட்ட காசுகள் அல்லது பொன்னை ஊர் அல்லது நிர்வாக சபையிடம் கொடுத்து வரிகளை நீக்கிக் கொண்டனர். இதற்க்கு இறையழிச்சு என்று பெயர். இவ்வாறு வரியை நீக்குவதற்காக கட்டும் பணத்திற்கு “திறை திரவியம்” என்றும் பெயர். குறிப்பாக அந்தணர்களுக்கு கொடுக்கப்பட்ட நிலங்கள் முழுமையாக வரி நீக்கம் செய்து கொடுக்கப்பட்டது. இதனை இறையிலி என்று அழைத்தனர். சில சமயங்களில் மக்கள் தானமாக வழங்கும் நிலங்களுக்கான வரிகளை மன்னனோ அல்லது ஊர் சபையார்களோ எந்த வித பணமும் பெறாமல் முழுமையாக வரி நீக்கிக் கொடுத்துள்ளனர். இதற்கு காசு கொள்ளா இறையிலி என்று பெயர்.

**கல்வெட்டுகளில் காணப்படும் இதர வரிகள்:**

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm07052026*

கீழிறைப்பாட்டம், திங்கள் மோறை, நாட்டாட்சி, ஊராட்சி, வட்டநாழி, கழனிவரி, நீர்கூலி (தண்ணீர் வரி), கருணீக ஜோடி, தலையாரிக்கம், நாட்டுக்கணக்கு வரி, அரிசி காணம், இராயச வர்த்தனை, அவசர வர்த்தனை, ஆட்டைச் சம்மாதம், கையேற்பு, பேர்ச்சம்மாதம், எலவை, கண் மட்ட வரி, கருவூல வரி, உகவை, வேண்டுகோள் வரி, சாலிகர், வச்ச விநியோகம், சாரிகை, கைவிலைக் காணம், வாசல் குழி, சிற்றாயம், கொல்லப்புஞ்சை, ரேகைக் காணிக்கை, தட்டொலி, அதிகார சோடி, கூற்று நெல், சில்வரி, மனைத் தறி, சேனை அங்காடிகள், புழுகு கடமை, தனியாள், ஆண்டெளுத்துத் தேவை, அச்சுவரி, வாசல் பணம், வணிகர் பேராற் கடமை குழிப் பணம், நத்தப் பச்சை, எடுத்துக்கொட்டி, சாரடை, பெரு வரி, புது நெல்லு, வாசல் விநியோகம், ஓலை எழுத்து விநியோகம், ஓலை எழுத்து, மதித் தேவை, விருந்துப்படி, ஆசுகவிகள் பேற்கடமை, இடைத் துறை, தேவைக்கிடும் பணம், ஒழுக்கு நீர், தாட்பிடியரிசி, நிலக்காணிக்கை, கொட்டைக்கூலி, கோள்நிறை கூலி, திங்கட் சோறு சண்டாளப் பேறு, சாட்டு வரி, உகப்பார் பொன், அட்டுக்கிறை, தோரணக் காணிக்கை, அரைக்கால்வாசி, ஆற்றுப்பாட்டம், அடிமைக்காசு, உரல்வரி, உல்லியக் கூலி, உழுதான் குடி, திருமுகக் காணம், துலாக் கூலி, துலாபார வரி, படுகைக்குறைக் கடமை, கூற்று நெல், சென்னீரமஞ்சி, வாசல் வரி, ஊசி வாசி, குருவை, பழ வரி, புது வரி, தலையாரி பேராமை, மேற் சாட்டி வரி, காரிய வராட்சி, அரிமுக்கை, புரவரி, வேதின வரி, கணக்குமுதல், கோலித் தறி, முதல் மந்தை பணம் எனப்பல வரிகள் இருந்தன. நானூற்றுக்கும் மேற்பட்ட வரிகள் இருந்ததாக கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. கோயில்களுக்கும் பிராமணர்களுக்கும் வரிவிலக்கு உண்டு. வரிச்சுமை அதிகமானதால் மக்கள் சிலர் ஊர்விட்டு நீங்கினர். சிலர் அரசாங்கத்திடம் மன்றாடி வரியைக் குறைத்துக் கொண்டனர். சில சமயங்களில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு ஊர் சபையினர் மீண்டும் மக்களை மறு குடி அமர்த்தி வரி சலுகைகள் கொடுத்து ஊரை காப்பாற்றினார். அந்தணர்களுக்கும் சைவ வேளாளர்களுக்கும் வரிச்சலுகை மிகுதியாக இருந்தது. இதனால் மக்கள் வணிகர்கள் ஒன்று கூடி உயர்சாதியினருக்கும், ஆட்சியாளர்களுக்கும் எதிராக கலகம் செய்து கோவில்களை இடித்துப் போராடிய வரலாறுகளும் கல்வெட்டில் காணக் கிடைக்கின்றது.

**கல்வெட்டுகளில் அளவு முறைகள்:**

வரியும் அளவு முறைகளும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்களைப் போன்றது. இதில் வரியை நிர்ணயம் செய்தால் அளவு முறைகளும் சேர்ந்தே செயல்படும். காரணம் வரியை செலுத்தும் போது அதை காசாகவோ பொன்னாகவோ அல்லது தானியங்களாகவோ செலுத்துவார்கள். அவ்வாறு செலுத்தும்போது காசு என்றால் அதன் மதிப்பு என்ன, பொன்னாக இருந்தால் அதன் மதிப்பு மற்றும் எடை அளவீடு எவ்வளவு, அல்லது தானியங்களாக இருந்தால் அதன் மதிப்பு மற்றும் எடை அளவு எவ்வளவு என்ற அடிப்படையில் தான் வரிகளை நிர்ணயம் செய்தனர். எனவே அளவு முறைகள் வரி நிர்வாகத்திலும் நிதி நிர்வாகத்திலும் சேர்ந்தே செயல்பட்டன என்பதைக் காண முடிகின்றது.

**அளவு முறையின் மாற்றங்கள்:**

வரிகள் காலங்களுக்கு ஏற்ப மாறுவதைப் போலவே அளவீட்டு முறைகளும் ஆட்சி மாற்றங்களுக்கு ஏற்ப மாறியுள்ளன. அளவீட்டு முறைகள் என்பது நில அளவு முறைகள், திட அளவு

, | Copyright © Author(s)

முறைகள், திரவ அளவு முறைகள் என மூன்று வகையாகப் பிரிக்கலாம். தமிழ் சமூகம் இதை எண்ணல், எடுத்தல், முகத்தல், நீட்டல் என வகைப்படுத்தி வைத்துள்ளனர். இந்த அளவு முறைகள் அரசியல் மாற்றங்களுக்கு ஏற்றாற்போல் அவ்வப்போது பெயர் மாற்றங்களையும் பெற்றுள்ளது. சில ஆட்சிகளில் குறிப்பிட்ட அளவு முறைகளையும் சில பகுதிகளில் குறிப்பிட்ட அளவு முறைகளையும் வழக்கமாக பின்பற்றியுள்ளனர்.

**நில அளவை:**

காலத்தால் முற்பட்ட ஒரு சமூகத்தால் மட்டுமே தனெக்கென விதி முறைகளையும் சமூக கட்டமைப்புகளையும் ஏற்படுத்தி அதில் வளர்ச்சியும் செய்திருக்க முடியும். அதன்படி தமிழ் சமூகமும் கால மாற்றத்தால் பல்வேறு அளவு முறைகளை பின்பற்றினர். ஒரு நிலத்தை அளவீடு செய்து பிரித்து எல்லைகள் வைத்து அந்த நிலத்தின் மதிப்பின் அடிப்படையில் வரிகளை நிர்ணயம் செய்தனர் நம் தமிழ் சான்றோர். அவ்வாறாக குழி, மா, காணி, வேலி காடி, மாகாணி, பார்த்தி, முந்திரிகை, பாடகம் என பல நில அளவு முறைகளும் தமிழரின் அடையாளமாக விளங்குகின்றது.

**குழி:**

ஒரு குழி என்பது 144 சதுர அடிகள் கொண்ட நில அளவாகும். பெரும்பாலும் இந்த அளவு முறையானது திருவண்ணாமலை உள்ளிட்ட பகுதிகளில் தான் அதிகமாக கையாளப் பட்டுள்ளது. நில அளவு முறையில் குறைந்த அளவு முறை குழி ஆகும்.

**மா:**

குழிக்கு அடுத்ததாக பெரிய அளவு உடையது மா ஆகும். 100 குழிகள் கொண்டது ஒரு மா நிலம். ஒரு மா என்பது 14,400 சதுர அடிக்கு சமமாகும். 3.5 மா கொண்டது தற்போதைய 1 ஏக்கர் நிலத்துக்குச் சமம்.

**காணி:**

மாவுக்கு அடுத்த பெரிய அளவு கொண்டது காணி ஆகும். ஒரு காணி என்பது ஏறக்குறைய 399 குழி நில அளவு சேர்ந்தது. இது 1.32 ஏக்கர் மற்றும் 57,499 சதுர அடி நிலத்துக்குச் சமம்.

**வேலி:**

ஒரு வேலி என்பது 20 மா அல்லது 2000 குழி அளவு சேர்ந்தது. இது சுமார் 6.5 ஏக்கர் நிலத்துக்குச் சமம். சோழர்கள் காலத்தில் ஒரு வேலி நிலத்திற்கு 100 கலம் அதாவது 2800 கிலோ நெல் வரியாகப் பெறப்பட்டது.

**பாடகம்:**

பாடகம் என்பது சுமார் 240 குழிகள் கொண்ட நில அளவு ஆகும்.

இவைகளைத் தவிர காடி, மாகாணி, அரைக்காணி, பார்த்தி, முந்திரி, கீழ்முந்திரி, மேல் முந்திரி, வீசம் போன்ற பல அளவுகள் இருந்துள்ளன. மேலும் நிலங்களை அளக்க ஒவ்வொரு இடங்களிலும் நாலு சாண் கோல், பன்னிரு சாண் கோல், உலகளந்த கோல், குன்றக்காற் பாறைக் கோல், இராவிய பாடன், விடேல் விடுகு கோல், கடமை இறுத்து வருகின்ற பெரிய கோல், வீரப்பாண்டியன் கோல், சுந்தர பாண்டியன் கோல், நாடளக்கும் கோல், வையகத்தார் கோல்,

நிவர்தனம், கடைகைக் கலத்துக் கோல், பாடகம், நாட்டு அளவு கோல், மாளிகை கோல், கலப்பை, பட்டிக்கா, என பல்வேறு விதமான பெயர்களில் அளவு கோல்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

**பொன் நிறுத்தல்:**

கோயிலுக்கு பொன்னை தானமாக கொடுப்பவர்களும், வரியை பொன்னாக கட்டுபவர்களும் கொடுக்கும் பொன்னை எடையிட்டு கொடுக்கும் போது சில அளவு முறைகள் பயன் படுத்தப்பட்டுள்ளன. அதன்படி குன்றிமணி (130 மி.கி அல்லது 4 நெல்), மஞ்சாடி (260 மி.கி அல்லது 2 நெல் அல்லது 2 குறுணி), வராகனெடை (4.8 கிராம்)), கழஞ்சு (5.1 கிராம் அல்லது 20 மஞ்சாடி), பலம் (35 கிராம்), வீசை (1.4 கிராம்), குடிஞைக் கல், எளர்புரம், தன்மக் கட்டளைக்கல், பண்டாரக் கல், பொன்பாடிக் கல் விடேல் விடுகு கல், ஆடவல்லான், தக்ஷிணமேருவிடங்கை, என பல எடைக் கற்களும் இருந்துள்ளன. எடுத்துக்கட்டாக பொன் பழஞ்சலாகை பொன், கழஞ்சுப் பொன், கண்ட கோபாலன் மாடைப் பொன், மாடைப் பொன் என பொன்னையும், காசுகளை கருங்காசு, பழவரவு காசு, ஈழக்கழஞ்சு, திரமம், அச்சுப் பணம், புதுக் காசு, நற்க்காசு, ராஜேந்திரன் காசு, நிறை குறையாப் பழங்காசு என பல பெயர்களிலும் அழைத்துள்ளனர்.

**தானிய அளவை முறைகள்:**

மக்கள் தங்களின் நிலத்தில் விளையும் பயிருக்காகக் கட்ட வேண்டிய வரியை தானியங்களாகவும் கட்டினர். அவ்வாறு கட்டும் போது பயிர்கள் மற்றும் நிலத்துக்கு ஏற்றவாறு வெவ்வேறு விதமான அளவு முறைகள் பின்பற்றப்பட்டன. அதில் குறுணி அல்லது மரக்கால் என்பது 8 படி அல்லது 8 நாழி (5.3 லி) அளவுடையது. பதக்கு என்பது 16 படி அல்லது 2 குறுணி (10.7 லி) அளவு கொண்டது. பொதி என்ற அளவின் படி 120 படி அல்லது 15 குறுணி ஆகும். ஒரு கலம் என்பது 96 படி அல்லது 768 குறுணி (64.5 லி) எடையுள்ளதாகவும். தற்போதைய மதிப்பில் 28 கிலோ ஆகும். ஒரு கோட்டை என்பது 21 மரக்கால் எடையுள்ள அளவாகும். மேலும் அளவுகள் கோமளம், ஆடவல்லான் மரக்கால், திருவெள்ளரிக்கானம் ராஜகேசரி, வீதிவிடங்கன், இலக்குவன் மரக்கால் என பல பெயர்களிலும் அழைக்கப்பட்டது.

**திரவ அளவை முறைகள்:**

எண்ணெய், நெய் போன்றவைகளை கோயில்களுக்கு தானமாக கொடுக்கும் போது அவற்றை அளந்து கொடுக்கும் பொருட்டு பின்பற்றப்பட்ட சில அளவு முறைகளும் உள்ளன. முதலாவதாக ஆழாக்கு என்னும் அளவாகும் இது சுமார் 168 மி.லி கொள்ளளவு கொண்டது. அடுத்ததாக 2 ஆழாக்கு அளவுகள் சேர்ந்தது ஒரு உழக்கு ஆகும். இது 336 மி.லி அளவுடையது. இரண்டு உழக்குகள் கொண்டது ஒரு உரி (672 மி.லி) என்னும் அளவாகும். இரண்டு உரி அளவுகள் கொண்டது ஒரு நாழி அல்லது படி (1.3 லி) எனப்படும். இது தவிர இன்னும் பல அளவு முறைகளும் இருந்துள்ளன. மேற்குறிப்பிட்ட இந்த அளவுகள் சில சமயங்களில் மன்னர்கள் அல்லது கோயில் திருமேனிகளின் பெயர்களிலும் எடுத்துக்காட்டாக நாராய நாழி, ராஜகேசரி உழக்கு, ஆரண தியாகி, பண்டார நாழி , கரு நாழி, விடேல் விடுகு உழக்கு, மனைய நாழி, பிடி, மானதண்டம்

அழைக்கப்பட்டன.

காலத்தால் அரிய இயலாத வகையில் தமிழ் சான்றோர்கள் தங்களின் அனுபவ அறிவினால் ஏற்படுத்திய இந்த வரி மற்றும் அளவு முறைகள் இன்றும் நமக்கு அரியதொரு கருவூலமாக இருக்கின்றன. அந்நியர்களின் ஆட்சி மற்றும் மொழி கலப்பினால் நம் பண்பாட்டு முறைகள் நம்மால் மறக்கப்பட்டு கைவிடப்பட்டும் உள்ளன. இருப்பினும் கல்வெட்டுகளின் சரணாலயமாக இருக்கும் கோயில்கள் நமது சான்றோர்களின் அரசியல், நிர்வாக திறன்களை நமக்கு எடுத்துரைக்கும் நூலகமாக திகழ்கின்றன.

**References:**

1. South Indian Inscriptions, (Pandya Inscriptions) Volume-14, 1986.
2. Annual Report of South Indian Epigraphy, March-1935.
3. Tirunelveli District Inscriptions, Vol-I, 2009.
4. South Indian Inscriptions, Vol-5, 1920.
5. South Indian Inscriptions, Vol-2, Part II, 1991.
6. South Indian Polity, Dr.T.V. Mahalingam, 1955.
7. The Pandyan Townships, Part-II, R.Thirumalai, 2003.

**தரவுகள்:**

1. பிற்காலச் சோழர் சரித்திரம், T.V.சதாசிவ பண்டாரத்தார், 2008.
2. செங்குந்தர் கைக்கோளர் முதலியார் வரலாற்று ஆவணங்கள், செ.ராசா, 2009.
3. தமிழ்நாடு மாநில வரலாற்றுக் கருத்தரங்கு, 1977, சென்னை.

நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி / Author Contribution Statement: இல்லை/NIL

கட்டுரையாளர் நன்றியுரை / Author Acknowledgement:

இல்லை/NIL

கட்டுரையாளர் உறுதிமொழி / Author Declaration:

இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்

I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work